**குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை**
**மாவட்ட ஆட்சியரின் பத்திரிக்கை செய்தி**

திண்டுக்கல் மாவட்டம், குழந்தைகள் நலம் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை, இளைஞர் நீதிக் குழுமத்தில் பணிபுரிந்திட கீழ்க்கண்ட 2 பதவிகளுக்கு ஒப்பந்த மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் (முற்றிலும் தற்காலிக பணியிடம்) நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணியிடங்களுக்கு சென்னை உயர்நீதி மன்ற விதி 2015ன் அடிப்படையில் கல்வித்தகுதியும், மிஷன் வத்சால்யா வழிகாட்டுதலின் அடிப்படையில் வயது வரம்பும், ஊதியமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- **உதவியாளர் உடன் இணைந்த பதிவேடு எழுத்தர் (Junior Assistant cum Record Clerk – 1 )**
  - அரசு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 10ம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்). இப்பணியிடத்திற்கு ரூ.20,000/- ( மாதம் ஒன்றிற்கு) தொகுப்பூதியமாக வழங்கப்படும்.
- **அலுவலக உதவியாளர் (Office Assistant – 1 )**
  - அரசு அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 8ம் வகுப்பு (VIII) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்). இப்பணியிடத்திற்கு ரூ.13,000/- ( மாதம் ஒன்றிற்கு) தொகுப்பூதியமாக வழங்கப்படும்.

மேற்கண்ட காலிப் பணியிடத்திற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சுய சான்றொப்பமிடப்பட்ட விண்ணப்பங்கள் அதிகாரப்பூர்வ இணையதளமான www.dindigul.nic.inலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். இப்பதவிகளுக்கு தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் விளம்பரம் வெளியிடப்பட்ட 15 வேலை நாட்கள் (12.10.2026 மாலை 05.30 மணிக்குள்) கீழ்க்கண்ட முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

- இக்காலிப்பணியிடம் முற்றிலும் தற்காலிகப் பணி ஆகும்.
- மேற்காணும் பணியிடத்திற்கு எதிர்காலத்தில் நீதிமன்றத்திலோ அல்லது வேறு அமைப்பிலோ நிரந்தர உரிமை கோரிட இயலாது.
- தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்களோ அல்லது முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலோ அல்லது முறையான ஆவணங்கள் இணைக்கப்படாமல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகம்,
பிளசிங்ஸ்,
பிளாட் எண்.4, 2-வது குறுக்குத்தெரு (மாடி),
எஸ்.பி.ஆர் நகர், மாவட்ட ஆட்சியரகம் (அஞ்சல்)
திண்டுக்கல் – 624 004
தொலைபேசி எண்.0451 – 2904070